**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS.356/2022

பெயர் : சுதாகர் (PW2) (Cross )

த/க/பெ. :

தேதி :18.09.2025

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் தினக்கூலி கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சொந்த ஊர் சீர்காழி தில்லைவிடங்கன் கிராமம் என்றால் சரிதான். கலைச்செல்வன் வட்டி தொழில் செய்த விபரம் தெரியும் என்றால் சரியல்ல. வாதியை 15 ஆண்டுகளாக தெரியும். வாதி என்ன வழக்கு போட்டுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி, பிரதிவாதிக்கு பதிவு அலுலகத்தில் பணம் கொடுத்தார். 29.11.2018 ம் தேதி கொடுத்தார். சாட்சி கையெழுத்து போட்ட முருகனுக்கு அந்த விபரம் தெரியும். முருகன் எந்த ஊர் என்பது எனக்கு தெரியாது. முருகனை பதிவு அலுவகத்தில் தான் பார்த்தேன் என்றாலும் அதற்கு முன்பு தெரியாது என்றாலும் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் கையெழுத்து மட்டும் போட தெரியும். பத்திரத்தை படிக்க தெரியாது. நான் கையெழுத்து போட்ட ஆவணத்தில் சுதாகர் த/பெ லெட்சுமணன், தலைஞாயிறு, இளந்தோப்பு, மயிலாடுதுறை என்றுள்ளது என்றால் சரிதான் என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தேதி மட்டும் சொன்னார்கள் ரூபாய். 4 லட்சம் பிரதிவாதிக்கு வாதி ஏன் கொடுத்தார் என்றால் நிலத்தை அடகு வைத்து பணம் வாங்கினார். சர்வே எண் சொல்ல இயலாது. கலைச்செல்வன் சொல்லி தான் சட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி பணம் கொடுக்வில்லை. நீங்கள் தான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளீர்கள் அதனால் சாட்சியம் அளிக்க வருமாறு அழைத்தார். அதற்கிடையே பிரதவாதி வாதிக்கு பணம் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முருகன், கலைச்செல்வன், மற்றும் ரவிச்சந்திரன் மட்டும் தான் இருந்தார்கள். வாதிக்கு அந்த பணம் எப்படி வந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் சாட்சி கையெழுத்து போட்டது வா.சா.ஆ. 1 சாட்சி கையெழுத்து போட்டது நான் இல்லை என்றாலும் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும்சரியல்ல. பத்திரத்தில் நான் கையெழுத்து போடவில்லைஎன்றாலும் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நிரூபண

வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை வாதி நிரூபிக்ககடமைபட்டுள்ளார் என்றாலும் சாட்சியம் அளிக்க வந்துள்ள நான் சார் பதிவகத்தில் கையெழுத்து போடவில்லை என்றாலும் பொய்யான நபரை கொண்டு பொய்யான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் வா.சா.ஆ. 1ன் முதல் சாட்சி முருகன் மயிலாடுதுறையை சேர்ந்தவர் தான் என்றாலும் அதனால் தான் எனக்கு அவரை தெரியாது எனறு சொல்கிறேன் என்றாலும் எனக்கு படிக்க தெரியாததை சாதகமாக்கி இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றாலும் சரியல்ல.